



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 260 | 14.03.2026 | SATURDAY | MAASI : 30 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 260 | 14.03.2026 | சனிக்கிழமை | மாசி : 30 | விலை : ரூ.5/-


## 'ஜல் ஜீவன்' நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க

# "பிரதமருக்கு முதல்வர் கடிதம்"



சென்னை: மார்ச்.14-

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்கவும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு (கட்டம்3) ஒப்புதலையும், நிதியுதவியையும் வழங்கிட வேண்டுமென்றும் முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில், "தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான குடிநீர் வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. கிராமப் பகுதிகளிலுள்ள 1.25 கோடி வீடுகளில், 1.12 கோடி வீடுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் குழாய்கள் மூலம் இணைப்புகளை வழங்கி, ஜல் ஜீவன் திட்டத்தில் தமிழ்நாடு பெருத்த முன்னேற்றத்தைச் சாதித்துள்ளது. இதற்கிடையில் இந்த இயக்கத்தினை மேலும் விரிவாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவினை வரவேற்கிறோம்.

ஜல் ஜீவன் மிஷன் இயக்கத்தின் முதல் கட்டத்தில், தமிழ்நாடு 45 புதிய பல கிராமங்களை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும், 56 பழைய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் மற்றும் 21,258 ஒற்றை கிராமத் திட்டங்களையும் மொத்தமாக 18,123 கோடி ரூபாய் செலவில் எடுத்துள்ளோம். அவற்றில் அனைத்து ஒற்றை கிராம குடிநீர்த் திட்டங்கள், பல கிராமங்களை அடக்கிய 101 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பழைய குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புத் திட்டங்களாக 92 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மீதமுள்ள 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடைமுறையில் முன்னேற்றத்தில் உள்ளன. ஆனால், ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்கு என ரூபாய் 5,914 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது, மேலும் ரூபாய் 3,112 கோடி நிலுவையில் உள்ளது. 2024ஆ 25 ஆண்டுக்காக தமிழ்நாட்டிற்கு ரூபாய் 2,434 கோடி ஒதுக்கப்பட்ட போதிலும், ரூ.732 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. 2024 செப்டம்பர் முதல் எந்த நிதியையும் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு பெறவில்லை.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டங்களில் பணிகளின் முன்னேற்றத்தை நிலைநாட்டுவதற்கும், உரிய காலத்தில் இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கும் தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து 2,550 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.

நடைமுறையில் உள்ள ஜல் ஜீவன் மிஷன் திட்டங்களின் நிறைவேற்றத்தை உறுதி செய்திட ஏதுவாக நிலுவைத் தொகையான 3,112 கோடி ரூபாய் நிதியை உடனடியாக விடுவிக்க, தாமதமின்றி பிரதமர் தலையிட வேண்டும்.

மேலும் ஜப்பான் பன்னாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட ஒகேனக்கல் (கட்டம்3) கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.8,428 கோடி செலவில் செயல்படுத்திட ஜல் சக்தி அமைச்சகத்தின் மாநிலத் திட்ட அனுமதி குழுவில் 15.06.2023 அன்று அனுமதிக்கப்பட்டது. அதில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்காக ரூ.2,283 கோடி அனுமதிக்கப்பட்டது.

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட உறுதியின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இத்திட்டத்தில் முன்னெடுப்புப் பணிகளை தொடங்கியது. ஆனால் ஒன்றிய குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புத் துறை, இத்திட்டத்தினை நீட்டிக்க அனுமதி பெறும் வரை, ஒன்றிய அரசின் உதவியை தற்போது வழங்க இயலாது எனக் குறிப்பிட்டுள்ளது, இந்த முக்கியமான திட்டத்திற்கு இந்தக் கட்டத்தில் ஒன்றிய அரசு தனது ஆதரவிலிருந்து பின்வாங்குவது என்பது, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்குவதை பாதிக்கும்.

ஒன்றிய அரசின் சமீபத்திய ஜல் ஜீவன் திட்டத்தினை விரிவாக்கம் செய்யும் முடிவினைக் கருத்தில் கொண்டு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு (கட்டம்3) ஒப்புதலையும், நிதியுதவியையும் வழங்கிட வேண்டும். அப்போதுதான் தமிழ்நாடு அரசு ஜப்பான் பன்னாட்டு முகமையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை தொடர இயலும். அதோடு, கூடுதலாக 10 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை சுமார் 7,590 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் திண்டுக்கல், நாமக்கல், திருச்சி, கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, தென்காசி, தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் உள்ளடக்கியுள்ளதாகவும், இந்தப் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஜல் ஜீவன் 2.0 திட்டத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட ஏதுவாக, ஒன்றிய அரசு தனது ஆதரவை தொடர்ந்து தரும் என நம்புகிறேன். பிரதமரின் ஆதரவினையும், விரைவான தலையீட்டினையும் எதிர்பார்க்கிறோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## இஸ்லாமிய மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன்

### மத நல்லிணக்க இப்தார் நோன்பில் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி!

திண்டுக்கல், மார்ச்.14-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், சித்தையங்கோட்டை பெரிய பள்ளிவாசலில் அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முத்தவல்லி கே.எஸ்.உதுமான்அலி, எம்.சேக்தாவுது, கே.பி.செல்ல மரைக்காயர் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டு பேசுகையில், அனைத்து சமுதாய மக்களும் இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் (இப்தார்) கலந்து கொண்டிருப்பது மத நல்லிக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

ஒவ்வொரு வருடமும் இந்த பள்ளிவாசலில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெருமையாக உள்ளது. காரணம் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை ஆத்தூர் தொகுதியில் எனக்கு ஆதரவு அளித்து வரும் இஸ்லாமிய சமுதாய மக்களில் சித்தையங்கோட்டையில் வசிக்கும் இஸ்லாமிய சமுதாய மக்கள் காட்டும் அன்பு அளவில்லாதது. எந்தவொரு கோரிக்கையாக இருந்தாலும் அனைத்து சமுதாய மக்களும் பயன்பெறும் வகையில் கேட்பார்கள். உடனே நான் செய்து கொடுத்துள்ளேன்.

இப்பகுதி விவசாயிகள் நலன் கருதி சாலை வசதி, பாலம் வசதி, நீர்வரத்து வாய்க்கால் வசதி போன்ற அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார். அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சித்தையங்கோட்டை பெரிய பள்ளிவாசல் ஜமாத்தார்கள் சார்பாக அனைத்து மதங்களைச் சேர்ந்த குருமார்களுக்கு ஆடைகளுடன் நிதி உதவி வழங்கி வாழத்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் சித்தையங்கோட்டை பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொண்ணு முரளி, பேரூர் கழக செயலாளர் சக்;திவேல், வார்டு உறுப்பினர்கள் தியாகு, லாவண்யா சுரேஷ், மாவட்ட சிறுபான்மையினர் அணியினைச் சேர்ந்த ரபீக் மைதீன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜாஹிர்உசேன், வார்டு செயலாளர் சையது அல்டாப், ஆத்தூர் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பளார் ஏ.முகமது ரபீக், நகர துணைச் செயலாளர் ஏ.அலாவுதீன், திமுக நிர்வாகிகள் செல்லம், தாசில், ஹக்கிம்சேட், செங்கிஸ்கான், ஜெய்லாணி, மற்றும் ஜமாத்தார்கள், சித்தையன்கோட்டை பேரூராட்சி பகுதி ஊர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தொழில்நுட்ப கோளாறு காரணமாக லண்டனிலிருந்து சென்னைக்கு வரவேண்டிய விமானம் ரத்து

மீனம்பாக்கம், மார்ச்.14-

இங்கிலாந்தின் தலைநகர் லண்டனிலிருந்து நாள்தோறும் அதிகாலை 5.30 மணியளவில் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் புறப்பட்டு சென்னை விமானநிலைய பன்னாட்டு முனையத்துக்கு வந்து சேரும். பின்னர் இங்கிருந்து மீண்டும் காலை 7.35 மணியளவில் லண்டனுக்குப் புறப்பட்டு செல்வது வழக்கம். அதேபோல், நேற்று லண்டனிலிருந்து சென்னைக்கு பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் புறப்படத் தயார்நிலையில் நின்றிருந்தது. அப்போது விமானத்தில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதனால் அந்த விமானம் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, லண்டனிலிருந்து இன்று அதிகாலை 5.30 மணியளவில் சென்னை விமானநிலைய பன்னாட்டு முனையத்துக்கு வரவேண்டிய பிரிட்டிஷ் ஏர்வேஸ் பயணிகள் விமானம், அதேபோல் சென்னையில் இருந்து மீண்டும் காலை 7.35 மணியளவில் லண்டனுக்குப் புறப்பட்டு செல்லும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் ஆகியவற்றின் சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதனால், சென்னையில் இருந்து நேற்று காலை பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் மூலமாக லண்டன் செல்ல தயார்நிலையில் இருந்த 218 பயணிகள் பெரிதும் பரிதவித்தனர்.

அதேபோல் லண்டனிலிருந்து நேற்று பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் மூலமாக சென்னை வரவேண்டிய சுமார் 250 பயணிகள் லண்டன் விமானநிலையத்தில் பரிதவித்து வருகின்றனர். இதுபற்றி அந்தந்த விமான நிலைய பயணிகளுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டது. இந்த விமானம் நாளை அதிகாலை லண்டனிலிருந்து சென்னை வந்துவிட்டு, மீண்டும் சென்னையில் இருந்து லண்டன் புறப்பட்டு செல்லும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் சென்னை விமான நிலையத்தில் பயணிகளிடையே பரபரப்பு நிலவியது.

## பிளஸ் 2 மாணவி படுகொலை : 3வது நாளாக உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம்



தூத்துக்குடி, மார்ச்.14-

தூத்துக்குடி அருகே பிளஸ் 2 மாணவி கொலை சம்பவத்தில் குற்றவாளிகளை கைது செய்யக்கோரி இன்று 3வது நாளாக உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் அடுத்த வேடநத்தம் பகுதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளியின் 2வது மகள் 12ம் வகுப்பு படித்து வந்தார். தற்போது பொதுத்தேர்வை எழுதி வந்தார். கடந்த 10ம்தேதி இரவு வீட்டின் அருகே உள்ள காட்டுப் பகுதிக்கு இயற்கை உபாதை கழிக்கச் சென்ற மாணவி ஒரு மணி நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதையடுத்து உறவினர்கள் காட்டுப்பகுதிக்கு தேடிச் சென்றனர். ஆனால் அவரை காணாததால் குளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை காட்டுப்பகுதியில் மாணவி முகத்தில் காயங்களுடன் இறந்து கிடந்தார். அவரது சடலத்தை மீட்ட போலீசார் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தகவலறிந்து ஆத்திரமடைந்த உறவினர்கள், பொதுமக்கள் திரண்டு குறுக்குச்சாலை ராமேஸ்வரம் சாலையில் வேடநத்தம் பேருந்து நிறுத்தம் அருகே மறியலில் ஈடுபட்டனர். மாணவி மரணத்துக்கு காரணமானவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும்.

புகார் கொடுக்கச் சென்ற போது அலைக்கழித்த குளத்தூர் காவல் நிலையம் மற்றும் விளாத்திகுளம் அனைத்து மகளிர் போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

சம்பவ இடத்துக்கு போலீசார் விரைந்து வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என போலீசார் உறுதி தெரிவித்ததையடுத்து மாணவியின் உறவினர்கள், கிராம மக்கள் கலைந்து சென்றனர்.

இந்நிலையில் இன்று 3வது நாளாக உடலை வாங்க மறுத்து உறவினர்களும், கிராம மக்களும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். மாணவி கொலையில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பல்வேறு இடங்களில் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

## மானாமதுரை ஆகாஷ் மரண வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு

மதுரை: மார்ச்.14-

மானாமதுரையில் சாலையில் நடந்து சென்றவர்களை அரிவாளால் வெட்டியதாக ஆகாஷ் என்ற இளைஞரை போலீஸார் கைது செய்தனர். முன்னதாக, போலீஸில் பிடிபடாமல் இருப்பதற்காக ஆகாஷ் தப்பியோடிபோது தவறி விழுந்து காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்காக அவரை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் ஆகாஷ் உயிரிழந்தார்.

இதையடுத்து 'ஆகாஷை போலீஸார் சட்டவிரோதமாக காவலில் வைத்து தாக்கி கொலை செய்துள்ளனர். இதனால் போலீஸார் மீது கொலை வழக்கு பதிய வேண்டும், வழக்கு விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டும், இழப்பீடு வழங்க வேண்டும், போலீஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும்' எனக் கோரி அவரது தந்தை ராஜேஷ்கண்ணன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எல்.விக்டோரியா கௌரி முன்பு விசாரணைக்கு வந்தபோது, ஆகாஷ் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதி, ஆகாஷ் உடலை பிரேத பரிசோதனை செய்யவும், வழக்கில் எஸ்சி, எஸ்டி பிரிவை சேர்க்கவும் உத்தரவிட்டார். அதன்படி ஆகாஷின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. வழக்கில் எஸ்சி, எஸ்டி பிரிவும் சேர்க்கப்பட்டது.

இருப்பினும் ஆகாஷின் உடலை வாங்க மறுத்து அவரது உறவினர்கள் மானாமதுரை தேசிய நெடுஞ் சாலையில் பந்தல் அமைத்து சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, கோரிக்கைகள் ஏற்கப்பட்ட நிலையிலும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் தேசிய நெடுஞ்சாலையில் போராட்டம் நடத்துவது சரியல்ல எனக் கருத்து தெரிவித்து, போராட்டம் நடத்தி வருவோரை காலி செய்ய போலீஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து, தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்று வந்த போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி விக்டோரியா கௌரி முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், 'ஆகாஷின் பெற்றோர் உடலை இன்னும் பெற்றுக்கொள்ளாமல் உள்ளனர். மனுதாரர் தரப்பில், எஸ்சி, எஸ்டி வன்கொடுமை சட்டப்படி ரூ.12 லட்சம் நிவாரணம் வழங்கியிருக்க வேண்டும். தற்போது ரூ.6 லட்சம் வழங்கியுள்ளனர்' எனக் கூறப்பட்டது. இதையடுத்து தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் நீதிபதி ஒத்திவைத்தார்.



# அலங்காநல்லூர் ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்: புதிய கட்டிடங்களை எம்.எல்.ஏ. வெங்கடேசன் திறந்து வைத்தார்

மதுரை, மார்ச.14-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியத்தில் அரசு சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் திறப்பு விழா மற்றும் புதியகட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு புதிய கட்டிடங்களை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். தொடர்ந்து குமாரத்தில் அங்கன்வாடி கோட்டைமேட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கல்லணை ஊராட்சியில் நியாய விலை கடை கீழசின்னணம்பட்டி ஊராட்சியில் நாடக மேடை அய்யூரில் பயணிகள் நிழல் குடை அ.கோவில்பட்டி, எர்ரம்பட்டி, கொழிஞ்சிபட்டி, ஆகிய கிராமங்களில் நியாய விலை கடை மற்றும் கலைஞர் ஏறு தழுவுதல் நூற்றாண்டு அரங்கு வளாகத்தில் தமிழ் கலாச்சார பூங்கா அமைக்க பூமி பூஜை விழா நடைபெற்றது.

இதில் மாவட்ட சுற்றுலாத்துறை அதிகாரிஉமாதேவி, கூட்டுறவு துறை அதிகாரிகள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வள்ளி, கதிரவன், திமுக ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், யூனியன் முன்னாள் ஒன்றிய துணை சேர்மன்சங்கீதா மணிமாறன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, சேதுசீனிவாசன், சுந்தர்ராஜன், ஈஸ்வரிசீனிவாசன், செல்விபாண்டி, விளையாட்டுமேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜெயராமன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, மாணவரணி யோகேஷ் புதுப்பட்டிஅன்பழகன், இரா.பரந்தாமன்,தகவல் தொழில்நுட்ப அணி கோட்டைமேடுராஜாஜி, சதீஷ், இளைஞரணி மெய்யப்பன்பட்டி சுரேஷ், பாலகிருஷ்ணன் கிளைச் செயலாளர் வீரன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# அலங்காநல்லூர் அரசுப் பள்ளியில் பசுமைப் புரட்சி: சூரிய ஒளி மின்சாரத்துடன் காய்கறி தோட்டம்

மதுரை, மார்ச். 14-

அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், பசுமைப் பள்ளித் திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் செலவில் சூரிய ஒளி மின்வசதியுடன் கூடிய காய்கறி, பழம் மற்றும் மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*இயற்கை விவசாயம்:* தக்காளி, கத்தரி, கீரை முதல் கொய்யா, நாவல், ஆடாதோடா வரை பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

*சத்துணவுக்குப் பயன்:* இங்கு விளையும் விளைபொருட்கள் மாணவர்களின் சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

*மின் சிக்கனம்:* சூரிய ஒளி மின்சாரம் மூலம் ஆழ்துளைக் கிணறு இயக்கப்படுவதால், பள்ளியின் மின்சாரச் செலவு பெருமளவு குறைந்துள்ளது.

இத்திட்டம் இவ்வளவு சிறப்பாகச் செயல்படுவதற்குப் பள்ளியின் தலைமையாசிரியர் காமாட்சி அவர்களின் சீரிய முயற்சியும், வழிகாட்டுதலும், அவருடன் இணைந்து, வேளாண் ஆசிரியை செல்வி முருகேஸ்வரி அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் மாணவர்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுத்துள்ளதாக பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

# திமுக கூட்டணியில் கொமதேகவுக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு: உதய சூரியன் சின்னத்தில் போட்டி



சென்னைமார்ச்.14-

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிக்கு (கொமதேக) இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கூட்டணி கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், திமுக கூட்டணியில் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திமுக தரப்பில் வெளியான அறிக்கையில், “நடைபெற உள்ள 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலில், முதல்வர் ஸ்டாலினும், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரனும் இன்று (13032026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியனர். அதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, தமிழ்நாட்டில் 2 (இரண்டு) சட்டமன்றத் தொகுதிகளில், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது” இவ்வாறு அதில் கூறப்படுகிறது.

திமுகவுடன் தொகுதிப் பங்கீடு முடிவடைந்த பின்பு கொமதேக பொதுச்செயலாளர் கொங்கு ஈஸ்வரன் செய்தியாளர்களுக்கு அளித்தப் பேட்டியில், “கூட்டணியின் நலன் கருதியும், நல்லதொரு ஆட்சி தமிழகத்தில் அமைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது. என்டிஏ கூட்டணி கட்சிகள் ஓரிடத்தில் கூட எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி சிறப்பாக இருந்தது எனக் கூறவில்லை” என்று தெரிவித்தார்.

# சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்




புதுடெல்லி, மார்ச்.14-

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வர்த்தக எல்பிஜி சிலிண்டர் பற்றாக்குறை நிலவுவதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள மகர் துவார் பகுதியில் காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் மத்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், மேற்கு ஆசியாவில் நடக்கும் போரால் இந்தியாவுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவரும் கே.சி. வேணுகோபால், ‘‘ஆட்சியாளர்கள் யதார்த்தத்தில் வாழவில்லை. அவர்கள் கனவுலகில் வாழ்கிறார்கள். எங்கள் தொகுதிகளில் மக்கள் மிகுந்த சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். தேசிய தலைநகரிலும் மக்கள் துன்பப்படுவதை நம்மால் பார்க்க முடிகிறது. இந்த யதார்த்தம் அவர்களை பாதிக்கவில்லை. அவர்கள் வாழும் உலகம் வேறாக உள்ளது. பொதுமக்களுடன் அவர்கள் இல்லை. இந்த அரசின் தவறான அணுகுமுறையாலும் வெளியுறவுக் கொள்கையாலுமே பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த விஷயம் குறித்து ராகுல் காந்தியை பேசவிடாமல் செய்கிறார்கள்’’ என்று தெரிவித்தார்.

காங்கிரஸ் எம்பி சசி தரூர் கூறும்போது, “நாம் அமைதிக்கான ஆக்கப்பூர்வமான குரலாக ஒலிக்க வேண்டும். இந்த மோதல் நம்மை கடுமையாக பாதித்துள்ளது. இது மற்ற நாடுகளையும் ஒட்டுமொத்த பிராந்தியத்தையும் எரிசக்தி விநியோகத்தையும் எரிசக்தி பாதுகாப்பையும், வளைகுடா நாடுகளில் வாழும் 90 லட்சம் இந்தியர்களின் நலன்கள் மற்றும் பாதுகாப்பையும் பாதிக்கப் போகிறது. நமது பல சர்வதேச உறவுகள் இதனால் ஆபத்துக்குள்ளாகி உள்ளன.

இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வர உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அழுத்தம் கொடுப்பதே உலக நலனுக்கு உகந்தது. இதில் நாம் ஒரு முன்னணி குரலாகத் திகழ வேண்டும். புவியியல் ரீதியாக நாம் அருகில் இருப்பதால், நமக்கு இழப்பு அதிகம். இதனால் நாம் அதிகம் பாதிக்கப்படுகிறோம்’’ என தெரிவித்துள்ளார்.

சிபிஐ எம்பி சந்தோஷ் கூறும்போது, ‘‘நாடு முழுவதும் குறிப்பாக பெரு நகரங்கள்தோறும் ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன. கிராமங்களில்கூட சமையல் எரிவாயு தட்டுப்பாடு உள்ளது. உண்மையான குற்றவாளி யார்? எல்பிஜி விநியோகம் எவ்வித இடையூறும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அவர்கள் ஏன் எங்களை குறைகூற வேண்டும்’’ என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்துப் பேசிய பாஜக எம்பி ஷஷாங் மணி, ‘‘இது ஒரு உலகளாவிய பிரச்சினை. நமது அரசாங்கம் அதை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. பீதியை தடுப்பதிலும், பதுக்கலைத் தடுப்பதிலும், பொதுமக்கள் நிதானத்தைக் கடைப்பிடிக்க வலியுறுத்தியிலும் நமது அரசாங்கத்தின் செயல் பாராட்டுக்குரியது. பல்வேறு இடங்களில் உள்ள நிலைமைகள் குறித்த தகவல்களை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர். இந்த விஷயத்தை எதிர்க்கட்சிகள் அரசியலாக்குவதைத் தவிர்க்க வேண்டும்’’ என கேட்டுக்கொண்டார்.

முன்னதாக இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இதற்கு சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதி மறுத்தார். இதனால், அமளி நீடித்ததை அடுத்து முதலில் அவை 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

# “ஒரு சாமானியரும் தலைவராகும் ஜனநாயகம் அதிமுகவில் உள்ளது” காளியம்மாள் பேட்டி



சென்னை, மார்ச்.14-

“ஒரு சாமானியரும் தலைவராகும் ஜனநாயகம் அதிமுகவில் உள்ளது” என அதிமுகவில் இணைந்த நாதக முன்னாள் நிர்வாகி காளியம்மாள் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் முன்னாள் நிர்வாகி காளியம்மாள் சென்னையில் இன்று (மார்ச் 13) காலை எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார். அவருக்கு கட்சியில் முக்கியப் பொறுப்பும், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பும் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “அதிமுகவை தேர்வு செய்ததற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. எடப்பாடி பழனிசாமி, அதிமுகவின் தலைமை பொறுப்புக்கு எளிய குடும்பத்தில் இருந்து வந்துள்ளார்.

ஒரு சாமானியரும் தலைவராகும் ஜனநாயக சூழல் இருப்பதால் தான் அதிமுகவை தேர்வு செய்து இருக்கிறேன். ஒரு தமிழனின் தலைமையின் கீழ் இயங்க அதிமுகவில் இணைந்துள்ளேன். ஒட்டுமொத்தமாக அனைத்து மக்களும் சேர்ந்து இந்த முடிவை எடுத்து இருக்கிறோம். இந்த முடிவை நான் தனித்து எடுக்கவில்லை.

மக்கள் ஒவ்வொரு நாளும் பிரச்சினைகளை சந்தித்து கொண்டுதான் இருக்கிறார்கள். விலைவாசி உயர்வு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகிய பல பிரச்சினைகளை மக்கள் சந்தித்து கொண்டுதான் இருக்கிறார்கள். மாற்றம் வராதா என எதிர்பார்க்கிறார்கள். வரவிருக்கும் தேர்தல் அதற்கான பரிசை தரும்.

அரசியல் கட்சியிலிருந்து விலகினாலும் மக்கள் அரசியலிலிருந்து விலகவில்லை. எனது குழந்தைகளுடன் நேரம் செலவிட விரும்பினேன். நாம் தமிழர் கட்சியில் செயல்படுவதற்கு முன்பு 2010ம் ஆண்டில் அதிமுகவில் ஏற்கெனவே செயல்பட்டுள்ளேன். 2010ல் அதிமுகவில் மாவட்ட பொறுப்பில் இருந்துள்ளேன். எனக்கு பொறுப்பு வழங்குவது குறித்து கட்சித் தலைமை முடிவு செய்யும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனைகள் கடுமையாக்க வேண்டும். அதுவரை இந்த தவறுகள் தொடர்ந்து கொண்டேஇருக்கும். மீண்டும் அந்தத் தவறை செய்யும் போதும் பயம் வரும் அளவுக்கு தண்டனைகளை கடுமையாக்க வேண்டும். அப்போது தான் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் குறையும்” இவ்வாறு காளியம்மாள் தெரிவித்துள்ளார்.



# ராணுவத்தில் பெண்களுக்கு லெப்டினென்ட் பணி


சென்னை, மார்ச்.14-

பணி லெப்டினென்ட் (என்சிசி ஸ்பெஷல் என்ட்ரி) (124வது கோர்ஸ்).சம்பளம்: ரூ.56,100 ரூ.1,77,500. வயது வரம்பு: 01.07.2026 தேதியின்படி 19 முதல் 25க்குள்.

தகுதி: ஏதாவதொரு பாடத்தில் இளநிலை பட்டம் பெற்று என்சிசி பயிற்சியில் குறைந்த பட்சம் ‘பி’ கிரேடு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். போரில் இறந்தவர்களின் வாரிசுகள் என்சிசி பயிற்சி பெறாவிட்டாலும் விண்ணப்பிக்கலாம்.உடற்திறன் தேர்வு: 2.4 கி.மீ., தூரத்தை 13 நிமிடங்களுக்குள் ஓடிக்கடக்க வேண்டும். சிட்அப்ஸ்25, புஷ்அப்ஸ்15, புல்அப்ஸ்2, ஸ்குவாட்ஸ் எடுத்தல், லங்க்ஸ் பயிற்சியில் வெற்றி பெற வேண்டும் மற்றும் 25 மீட்டர் தூரம் நீந்துதல், கயிறு ஏறுதல் ஆகிய உடற்திறன் சோதனைகளிலும் வெற்றி பெற வேண்டும். எஸ்எஸ்பி தேர்வு 2026 அக்டோபரில் நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு கடிதம் இ.மெயிலில் அனுப்பி வைக்கப்படும். நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஏசி3 டயர் ரயில்/பஸ் கட்டணம் வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு சென்னையிலுள்ள ஆபீசர்ஸ் டிரெய்னிங் அகடமியில் 49 வாரங்கள் பயிற்சி வழங்கப்படும். பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு நேர்முகத்தேர்வு, உடற்தகுதி தேர்வு நடத்தப்படும். தேர்வு நடைபெறும் தேதி, இடம் போன்ற விவரங்கள் இ.மெயிலில் தெரிவிக்கப்படும். பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு உதவித் தொகையுடன் 6 மாதங்கள் அதிகாரி பணிக்கான பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்குப் பின் லெப்டினென்ட் பணி வழங்கப்படும். www.joinindianarmy.nic.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

# தமிழகத்தில் 15% உணவகங்கள் மூடல் கள்ளச்சந்தையில் சிலிண்டர் ரூ.6,000க்கு விற்பனை



சென்னை, மார்ச்.14-

வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாட்டால், தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், கள்ளச்சந்தையில், வணிக சிலிண்டர் விலை ரூ.6 ஆயிரமாக உயர்ந்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் தீவிரத்தால், மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி, விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், திரவ பெட்ரோலியம் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளிப்பதற்காக, வர்த்தக சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, சென்னை உட்பட பல நகரங்களில் உணவுகளை தயாரித்து வழங்கும் ஹோட்டல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஹோட்டல்களில் விற்கப்படும் உணவு வகைகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, வணிக சிலிண்டர் இல்லாததால், ஓட்டல்களும் மூடப்பட்டுள்ளன.215 ஹோட்டல்கள் மூடல்இந்நிலையில், தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து, அச்சங்கம் தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது: வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக, சென்னையில் 215 சிறிய மற்றும் நடுத்தர ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. பெரிய அளவிலான ஹோட்டல்கள் விறகு மற்றும் மின்சார அடுப்புகளுக்கு மாறியுள்ளன. சென்னை தவிர்த்து பிற நகரங்களில் பெரும்பாலானோர் மாற்று எரிபொருளுக்கு மாறியுள்ளனர்.மேலும் காஸ் சிலிண்டர் வருகையைப் பொருத்து அவ்வப்போது ஹோட்டல்களை திறப்பதும், உணவு வகைகளை கணிசமாக குறைத்தும் விற்பனையை மேற்கொள்கின்றனர் தமிழகத்தில் இது வரை தோராயமாக 300க்கும் மேற்பட்ட உணவுக் கடைகள் அதாவது மொத்தம் உள்ள கடைகளில் 15 சதவீதம் என்ற அளவில் மூடப்பட்டுள்ளது. இவ்வாறு அச்சங்கத்தின் தெரிவித்துள்ளனர்.கள்ளச்சந்தையில் ரூ.6 ஆயிரம்வர்த்தக சிலிண்டர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கள்ளச்சந்தையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர்கள் மிக அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.2,043.50 ஆகும். இது தற்போது ரூ.6 ஆயிரம் முதல் ரூ.6,500 வரை கள்ளச்சந்தையில் கிடைக்கிறது.தேநீர் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில் “வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் கிடைக்கவில்லை, கள்ளச்சந்தையில் இந்த சிலிண்டர் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எனவே மின் அடுப்புக்கு மாறிவிட்டோம். மேலும் வடை, பஜ்ஜி, சமோசா, போண்டா போன்றவற்றை தயாரிப்பதை நிறு த்திவிட்டோம்” என்று தெரிவித்தார்.

# தமிழகத்தில் 15% உணவகங்கள் மூடல் கள்ளச்சந்தையில் சிலிண்டர் ரூ.6,000க்கு விற்பனை

## வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாடு

சென்னை, மார்ச்.14–

வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாட்டால், தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கள்ளச்சந்தையில், வணிக சிலிண்டர் விலை ரூ.6 ஆயிரமாக உயர்ந்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் தீவிரத்தால், மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி, விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், திரவ பெட்ரோலியம் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளிப்பதற்காக, வர்த்தக சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, சென்னை உட்பட பல நகரங்களில் உணவுகளை தயாரித்து வழங்கும் ஹோட்டல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஹோட்டல்களில் விற்கப்படும் உணவு வகைகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, வணிக சிலிண்டர் இல்லாததால், ஓட்டல்களும் மூடப்பட்டுள்ளன.



215 ஹோட்டல்கள் மூடல் இந்நிலையில், தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அச்சங்கம் தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது: வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக, சென்னையில் 215 சிறிய மற்றும் நடுத்தர ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. பெரிய அளவிலான ஹோட்டல்கள் விறகு மற்றும் மின்சார அடுப்புகளுக்கு மாறியுள்ளன. சென்னை தவிர்த்து பிற நகரங்களில் பெரும்பாலானோர் மாற்று எரிபொருளுக்கு மாறியுள்ளனர்.

மேலும் காஸ் சிலிண்டர் வருகையைப் பொருத்து அவ்வப்போது ஹோட்டல்களை திறப்பதும், உணவு வகைகளை கணிசமாக குறைத்தும் விற்பனையை மேற்கொள்கின்றனர் தமிழகத்தில் இது வரை தோராயமாக 300க்கும் மேற்பட்ட உணவுக் கடைகள் அதாவது மொத்தம் உள்ள கடைகளில் 15 சதவீதம் என்ற அளவில் மூடப்பட்டுள்ளது. இவ்வாறு அச்சங்கத்தின் தெரிவித்துள்ளனர்.

கள்ளச்சந்தையில் ரூ.6 ஆயிரம் வர்த்தக சிலிண்டர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கள்ளச்சந்தையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர்கள் மிக அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.2,043.50 ஆகும். இது தற்போது ரூ.6 ஆயிரம் முதல் ரூ.6,500 வரை கள்ளச்சந்தையில் கிடைக்கிறது.

தேநீர் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில் "வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் கிடைக்கவில்லை, கள்ளச்சந்தையில் இந்த சிலிண்டர் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எனவே மின் அடுப்புக்கு மாறிவிட்டோம். மேலும் வடை, பஜ்ஜி, சமோசா, போண்டா போன்றவற்றை தயாரிப்பதை நிறுத்தி விட்டோம்" என்று தெரிவித்தார்.

# சாலைகளை தோண்டும்போது அனைத்து துறைகளும் இணைந்து செயல்பட வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க கோரி வழக்கு

## தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை: மார்ச்.14–

மழைநீர் வடிகால் பணிக்காக சாலைகளை தோண்டும்போது அனைத்து துறைகளும் இணைந்து செயல்படும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கக் கோரி தொடரப்பட்டுள்ள வழக்கில், இதுதொடர்பாக தமிழக அரசு இரு வாரங்களில் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக கோட்டூர்புரத்தைச் சேர்ந்த முரளிதரன் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருந்ததாவது:

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கோட்டூர்புரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி கடந்த ஒன்றரை மாதங்களாக நடைபெற்று வருகிறது.

இப்பணிகளுக்காக சாலைகள் அடிக்கடி தோண்டப்பட்டு சேதப்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற பணிகளின் போது வீடுகளின் மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்புகளும், கழிவுநீர் இணைப்புகளும் துண்டிக்கப்படுவதால் பொதுமக்கள் சிரமம் அடைய வேண்டியுள்ளது.

மழைநீர் வடிகால் பணிக்கு பிறகு தோண்டப்படும் சாலைகள் மீண்டும் முறையாக சீரமைக்கப்படாததால் விபத்து அபாயமும் ஏற்பட்டு வருகிறது. வாகனங்களும் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்க நேரிடுகிறது.

எனவே, இனிவரும் காலங்களில் மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகளுக்காக சாலைகளை தோண்டும்போது சென்னை மாநகராட்சி, மின் வாரியம், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், காவல்துறை ஆகிய துறைகள் இணைந்து செயல்படும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க உத்தரவிட வேண்டும்.

அதேபோல், கோட்டூர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் தலா ரூ.1 லட்சத்தை இழப்பீடாக வழங்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுதொடர்பாக தமிழக அரசு மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் இரு வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளனர்.

# மோடியையும் பழனிசாமியையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் தாக்கு

சென்னை, மார்ச்.14–

"விவசாயிகளின் எதிரி மோடியையும் அவருக்குத் துணை போகும் பழனிசாமியையும் தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்" என இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: பிரதமர் மோடி பொய்ப் பிரச்சாரங்களின் பிதாமகர். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்று கூறிவிட்டு, கருப்புச் சட்டங்கள் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்தவர் மோடி. போராடியவர்கள் மீது



தடியடி நடத்தினார்கள். லக்கிம்பூரில் விவசாயிகள் மீது காரை ஏற்றிப் படுகொலை செய்தார்கள்.

வேளாண் சட்டங்களை ஆதரித்த பழனிசாமி, விவசாயிகளின் துரோகி. திமுக ஆட்சியில் வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் மூலம் 5 ஆண்டுகளில் ரூ.1.94 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2 லட்சம் புதிய இலவச மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சியில் 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, தற்போது 5.66 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்க விவசாயப் பொருட்களுக்கு வரிச்சலுகை அளித்து இந்திய விவசாயத்தைச் சவக்குழியில் தள்ள பிரதமர் முயல்கிறார். போதைப் பொருள் தடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. தமிழக அரசு குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயிகளின் எதிரி மோடியையும் அவருக்குத் துணை போகும் பழனிசாமியையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பராமரிப்பு பணிகளுக்காக வண்டலூர் பூங்கா 11 நாள் மூடல்: பூங்கா நிர்வாகம் அறிவிப்பு

சென்னை, மார்ச்.14–

பராமரிப்பு பணிகளுக்காக வண்டலூர் உயிரியல் பூங்கா மார்ச் 18ம் தேதி முதல் 28ம் தேதி வரை 11 நாள் மூடப்படும் என்று பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது. சென்னை வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா உள்ளது. இங்கு சிங்கம், புலி, கரடி, யானை, மான்கள் உள்ளிட்ட பல அரியவகை விலங்குகளும், ஏராளமான பறவைகளும் உள்ளன. இதனை காண தினந்தோறும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் வந்து கண்டு களித்துவிட்டு செல்வது வழக்கம். இந்நிலையில், பராமரிப்பு பணிகளுக்காக வண்டலூர் உயிரியல் பூங்கா வரும் 18ம் தேதி முதல் 28ம் தேதி வரை 11 நாள் மூடப்படும் என்று பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது. இதுகுறித்து, பூங்கா நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் கூறுகையில், 'வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் அவசர பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காகவும், பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் சிங்கம் மற்றும் மான் சபாரி சேவை மார்ச் 18ம் தேதி முதல் 28ம் தேதி வரை மூடப்படும்' என்று தெரிவித்துள்ளது.

# சட்டப்பேரவை தேர்தல் முன்னேற்பாடுகள்: தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் சென்னை டிஇஓ ஆலோசனை

சென்னை: மார்ச்.14–

சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக சென்னை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலர் (டிஇஓ) ஜெ.குமரகுருபரன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் எதிர்வரும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்தி கண்காணிக்க தேர்தல் இணைப்புப் பொறுப்பாளர்கள் (Nodal Officers) நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு, வீடியோ கண்காணிப்புக் குழு மற்றும் வீடியோ




பார்வையிடும் குழு ஆகியவற்றின் மூலம் சென்னை மாவட்டம் முழுவதும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்களில் நாளொன்றுக்கு தலா 3 குழுக்கள் வீதம் சுழற்சி முறையில் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

3 நபர்கள் அடங்கிய வீடியோ கண்காணிப்புக் குழு தயார்நிலையில் இருக்கவும், இந்தக் குழுக்கள் ஒவ்வொரு நாளும் களப்பணியில் இருந்து, சட்ட விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன் மீது நடைமுறையில் உள்ள சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அதை உயர்நிலை அலுவலர்களுக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் செலவின கண்காணிப்புக்காக தேர்தல் கைப்பற்றுகை மேலாண்மை அமைப்பு (Election Seizure Management System) 20க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் மூலம் செயல்பட உள்ளது குறித்து விளக்கப்பட்டது.

மேலும் சிவிஜில் (C-VIGIL) என்ற பொதுமக்கள் கண்காணிப்பு செயலி மூலம் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் க.கற்பகம், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்)பூஷ்ணாதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அதிமுகவில் இணைந்தார் காளியம்மாள் பழனிசாமி முன்னிலையில் ஐக்கியம்!

சென்னை, மார்ச்.14–

நாம் தமிழர் கட்சியின் முன்னாள் நிர்வாகி காளியம்மாள் சென்னையில் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார்.

அவருக்கு கட்சியில் முக்கியப் பொறுப்பும், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பும் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாம் தமிழர் கட்சி மகளிர் பாசறையின் ஒருங்கிணைப்பாளராக இருந்தவர் பி.காளியம்மாள். தன்னுடைய அதிரடி பேச்சால் குறுகிய காலத்திலேயே பிரபலமடைந்தார். கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் வட சென்னை தொகுதி நாம் தமிழர் வேட்பாளராக போட்டியிட்டார். அப்போது 60,000 வாக்குகள் பெற்றார். அந்தத் தேர்தலின்போது அவரின் பேச்சுகள் சமூக வலைதளங்களில் வைரலாகின.

இந்நிலையில், அவர் கடந்த பிப்ரவரியில் நாம் தமிழர் கட்சியிலிருந்து விலகினார். அப்போது,



"தமிழ்த் தேசியத்தை விதைக்கும் வகையில் எம் பயணம் தொடரும்" என அறிவித்திருந்தவர், எந்தக் கட்சியிலும் இணையாமல் இருந்தார். அவருடன் திமுக, அதிமுக, தவெக என அனைத்துக் கட்சிகளுமே பேச்சுவார்த்தையில் இருந்ததாகக் கூறப்பட்டது.

இந்நிலையில், இன்று காலை அவர் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அக்கட்சியில் இணைந்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் அளித்தப் பேட்டியில், "ஒரு தமிழனின் தலைமையில் இயங்கவே அதிமுகவில் இணைந்தேன். ஒரு சாதாரண குடும்பப் பின்னணியில் இருந்துவந்த எடப்பாடி பழனிசாமியின் தலைமையை ஏற்று நான் இன்று அதிமுகவில் இணைந்துள்ளேன்" என்றார்.

நாகையைச் சேர்ந்த காளியம்மாள் தனது ஆரம்ப காலத்தில் கடலோரப் பகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், 15 கடலோர மாவட்டங்களை ஒருங்கிணைத்து, 'தமிழக மீனவ பெண் தொழிலாளர்கள் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் மாநில பொதுச் செயலாளராக இருந்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

# "எரிவாயு தீர்ந்தால் நயினார் அண்ணனிடம் வாங்கிக் கொள்வேன்" அப்பாவு அதிரடி தமாஷ்

திருநெல்வேலி, மார்ச்.14–

"சமையல் எரிவாயு தீர்ந்துவிட்டால் நயினார் அண்ணனிடம் வாங்கிக் கொள்வேன்" என்று சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு வேடிக்கையாகத் தெரிவித்தார்.

நேற்று திருநெல்வேலியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது: தமிழகத்தில் கடந்த 11 ஆண்டுகளில் எந்தவொரு ரயில்வே அமைச்சராவது ஒரு ரயிலை தொடங்கி வைத்திருக்கிறாரா. வெளியுறவுத் துறை அமைச்சரோ, பாதுகாப்புத் துறை அமைச்சரோ சுயேச்சையாக ஏதாவது திட்டத்தை தொடங்கி வைத்திருக்கிறார்களா. அனைத்தும் பிரதமரின் பெயரிலேயே நடக்கிறது. இது தனிநபர் ஆட்சி போல உள்ளது.



பாஜகவின் உண்மையான கூட்டணி என்பது அமலாக்கத்துறை, சிபிஐ, வருமான வரித்துறை மற்றும் தற்போது புதிதாகச் சேர்ந்துள்ள தேர்தல் ஆணையம் ஆகியவையே. இவர்களை வைத்துக் கொண்டு தான் ஒவ்வொரு மாநிலத்திலும் பாஜக அரசியல் செய்கிறது. தமிழகம் இந்தியாவில் ஒரு பகுதியாக இருப்பதால், இங்கே நடந்த வளர்ச்சியைத் தாங்கள் செய்ததாக மத்திய அரசு விளம்பரம் செய்து கொள்கிறது. வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணி 53 சதவீத வாக்குகளைப் பெறும். மீண்டும் மு.க.ஸ்டாலினின் ஆட்சி அமையும். இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு, "சமையல் எரிவாயு தீர்ந்துவிட்டால் நயினார் அண்ணனிடம் வாங்கிக் கொள்வேன்" என்று சிரித்தபடி அப்பாவு பதில் அளித்தார்.

# சிட்டிங் எம்எல்ஏக்களில் 12 பேருக்கு சீட் இல்லை: திமுக நிபந்தனையால் அலறும் காங்கிரஸ்

சென்னை, மார்ச்.14–

காங்கிரஸ் திமுக தொகுதிப் பங்கீடு நீண்ட இழுபறிக்குப் பிறகு இறுதியான நிலையில், அடுத்ததாக காங்கிரஸின் சிட்டிங் எம்எல்ஏக்கள் 12 பேருக்கு மீண்டும் சீட் கொடுக்கக் கூடாது எனவும் அந்தத் தொகுதிகளில் சிலவற்றை தங்களுக்கு விட்டுத்தர வேண்டும் எனவும் திமுக தரப்பிலிருந்து அழுத்தம் தரப்படுவதாகச் சொல்லப்படுவதால் மீண்டும் காங்கிரஸ் வட்டாரம் கொதிநிலைக்கு மாறி வருகிறது.

காங்கிரஸில் தற்போது எம்எல்ஏக்களாக இருக்கும் 17 பேரும் மீண்டும் தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று காத்திருக்கிறார்கள். இந்த நிலையில் தான், அவர்களில் 12 பேருக்கு மீண்டும் சீட் கிடைப்பதில் திமுக செக் வைப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுகுறித்து அறிவாலய வட்டாரத்தில் இருந்து நம்மிடம் பேசியவர்கள் "திமுக மற்றும் கூட்டணிக் கட்சி எம்எல்ஏக்களின் செயல்பாடுகள் குறித்து 'பென்' நிறுவனம்,



முதல்வர் மற்றும் உதயநிதியின் பிரத்யேக வியூகக் குழுக்கள், உளவுத் துறை என மூன்று தரப்பிலிருந்தும் எடுக்கப்பட்ட சர்வேயின் படி காங்கிரஸ் எம்எல்ஏக்களில் சிலர் மீது திருப்தியான தகவல் இல்லை.

வேளச்சேரி அசன் மௌலானா, சிவகாசி அசோகன், வைகுண்டம் ஊர்வசி அமிர்தராஜ் தொகுதிகளில் கடும் அதிருப்தி நிலவுகிறது. அதனால் இந்தத் தொகுதிகளை இம்முறை திமுகவே எடுத்துக் கொள்வது என முடிவெடுக்கப் பட்டிருக்கிறது. இதேபோல், தொடர்ச்சியாக காங்கிரஸ் கட்சிக்கு விட்டுத்தரப்படும் காரைக்குடி தொகுதியிலும் இம்முறை திமுக போட்டியிட வேண்டும் என அங்குள்ள நிர்வாகிகள் பிடிவாதமாக இருக்கிறார்கள். ஆனால், ப.சிதம்பரத்தின் சொந்தத் தொகுதி காரைக்குடி. அவரது ஆதரவாளரான மாங்குடி தான் இப்போது அங்கு எம்எல்ஏவாக இருக்கிறார். காரைக்குடி திமுகவினர் என்னதான் மன்றாடினாலும் சிதம்பரத்தின் விருப்பத்துக்கு மாறாக அங்கே திமுக தலைமை எந்த முடிவையும் எடுக்காது.

குளச்சல் தொகுதியில் தொடர்ச்சியாக பிரின்ஸுக்கே வாய்ப்பளிக்கப் படுவதால் காங்கிரஸ், திமுக என இரு தரப்பிலுமே அதிருப்தி நிலவுகிறது. எனவே, அவரைத் தவிர்த்து இன்னொருவரை அங்கே வேட்பாளராக நிறுத்த காங்கிரஸை வலியுறுத்தும் முடிவில் இருக்கிறது திமுக. சோளிங்கர் எம்எல்ஏவான முனிரத்தினமும், விருத்தாசலம் எம்எல்ஏவான ராதாகிருஷ்ணனும் கே.எஸ்.அழகிரியின் ஆதரவாளர்கள் என்பதால் செல்வப்பெருந்தகை தரப்பே இவர்களுக்கு எதிராக நிற்கிறது. அதனால் இந்தத் தொகுதிகளையும் தங்களுக்கோ அல்லது தேமுதிக உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுக்கோ ஒதுக்கும் முடிவில் தான் திமுக தலைமை இருக்கிறது.

இதேபோல் பொன்னேரி துரை சந்திரசேகர், விளவங்கோடு தாரகை கத்பர்ட்டுக்கு எதிராகவும் காங்கிரஸுக்குள்ளேயே புகைச்சல் இருக்கிறது. இவர்களையும் மாற்றி விடும்படி காங்கிரஸுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு முறையாக காங்கிரஸ் வசமுள்ள நீலகிரி தொகுதியிலும் இம்முறை திமுக போட்டியிட வேண்டும் என அங்குள்ள நிர்வாகிகள் விரும்புகிறார்கள். பெரும்புதூரில் செல்வப்பெருந்தகைக்கு எதிராகவும் அதிருப்தி நிலவுகிறது. அவருக்கு மீண்டும் சீட் கொடுக்கக் கூடாது என திமுக நிர்வாகிகள் முதல்வரிடம் நேரடியாகவே கோரிக்கை வைத்திருக் கிறார்கள். அவரும் இம்முறை அங்கு போட்டியிடும் மனநிலையில் இல்லை. கிள்ளியூர் ராஜேஷ்குமார் திமுகவை சங்கடப்படுத்தும் விதமாகப் பேசிவருவதால், அவரையும் மாற்றச் சொல்லும் முடிவில் இருக்கிறது எங்கள் தலைமை" என்றனர்.

இதுகுறித்து திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியிடம் கேட்டதற்கு, "நாங்கள் எந்த சர்வேயும் எடுக்கவில்லை. காங்கிரஸில் யாருக்கு சீட் கொடுக்க வேண்டும் என்பதை அந்தக் கட்சித் தலைமை தான் முடிவு செய்யும்" என்றார்

# 10,12ம் வகுப்பு மாணவர்கள் தாங்கள் எழுதிய தேர்வு விடைத்தாளை ஆர்டிஐ மூலம் கேட்டுப்பெறலாம் என்று மாநில தகவல் ஆணையம் அறிவிப்பு

சென்னை, மார்ச்.14–

10,12ம் வகுப்பு மாணவர்கள் தாங்கள் எழுதிய தேர்வு விடைத்தாளை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் கேட்டுப்பெறலாம் என்று மாநில தகவல் ஆணையம் அறிவித்துள்ளது. 2023ல் நடைபெற்ற 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் தான் எழுதிய விடைத்தாள்களை கேட்டு மாணவி மனு தாக்கல் செய்திருந்தார். ஆனால் அரசு தேர்வுகள் இயக்ககம், தேர்வு முடிந்த 5 நாட்கள் மட்டுமே அவகாசம் உள்ளது எனக் கூறி நிராகரித்தது. விடைத்தாள் வழங்கப்படாத நிலையில் மாநில தகவல் ஆணையரிடம் மாணவி மேல்முறையீடு செய்தார். மாணவி மேல்முறையீட்டு மனுவை விசாரித்த தகவல் ஆணையர், கட்டணம் செலுத்தி விடைத்தாளை பெற்றுக் கொள்ள உத்தரவிட்டுள்ளது. பக்கத்திற்கு ரூ.2 வீதம் கட்டணம் செலுத்தி நகல்களைப் பெற முடியும்.




# அண்ணா மறுமலர்ச்சி திட்ட புதிய நியாய விலைக் கடை: அமைச்சர் திறந்து வைத்தார்

திருப்பூர், மார்ச். 14-

திருப்பூர் மாவட்டம், காளிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட புதுப்பாளையம் செந்தில் நகரில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் புதிய நியாய விலைக் கடை அமைக்கப்பட்டுள்ளது. ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இந்த புதிய நியாய விலைக் கடையை, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் ரிப்பன் வெட்டித் திறந்து வைத்தார்.

நிகழ்வில், திருப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயகுமார், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரத்தினம்பாள் சிவசாமி உள்ளிட்ட திமுக முக்கிய நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



# சட்டமன்றத் தேர்தல் 2026: அச்சமின்றி வாக்களிக்க பொதுமக்களுக்கு நம்பிக்கை ஊட்டிய விழுப்புரம் காவல்துறை

திண்டிவனம், மார்ச். 14-

தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாகத் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றவும், 100% வாக்குப்பதிவை உறுதி செய்யவும் வலியுறுத்தி, திண்டிவனம் காவல் உட்கோட்டத்தில் மாபெரும் கொடி அணிவகுப்புப் பேரணி நடைபெற்றது.

*அணிவகுப்புப் பாதை:*

விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் உத்தரவின்படி நடைபெற்ற இந்த ஊர்வலம், திண்டிவனம் காவல் நிலையத்தில் இருந்து தொடங்கி, நேரு வீதி, காந்தி சிலை, தீர்த்த குளம், ஆதித்யா பள்ளி வழியாகச் சென்று, மரக்காணம் சாலையில் உள்ள கிடங்கள் மிமி வீதி வழியாக மீண்டும் காவல் நிலையத்தையே வந்தடைந்தது.

*பங்கேற்றவர்கள்:*

இந்த அணிவகுப்பில் திண்டிவனம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் பிரகாஷ், ஆயுதப்படை துணை காவல் கண்காணிப்பாளர் ஞானவேல், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் கலந்துகொண்டனர். இவர்களுடன் தமிழக காவல் ஆளிநர்கள் மற்றும் மத்திய எல்லை பாதுகாப்புப் படையினர் (ஙிஷிதி) என மொத்தம் 175க்கும் மேற்பட்டோர் சீருடையில் அணிவகுத்துச் சென்று பொதுமக்களுக்குப் பாதுகாப்பு குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தினர்.



■ புதுச்சேரி காவல்துறை மற்றும் ஊர்க்காவல் படையில் தேர்வான 2 காவலர்கள் மற்றும் 24 ஊர்க்காவல் படையினருக்கு உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



■ புதுச்சேரி மாநிலம் மண்ணாடிப்பட்டு கொம்யூன் வாதானூர் கிராமத்தில் பெருமாள் கோவில் மற்றும் ஆஞ்சநேயர் கோவில் மகா கும்பாபிஷேகத்திற்கு புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் ரூபாய் 3 லட்சம் ரொக்கம் தொகையை வாதானூர் பிஜேபி கட்சி பிரமுகர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் வழங்கினார்.

# தென்காசியில் 'நடப்போம் நலம் பெறுவோம் 2.0' திட்டம்சுகாதார நடைபாதையை ஆட்சியர் துவக்கி வைத்தார்

செங்கோட்டை, மார்ச். 14-




தென்காசி மாவட்டம், செங்கோட்டை நித்யகல்யாணி அம்மன் திருக்கோவில் அருகில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 'நடப்போம் நலம் பெறுவோம் 2.0' திட்டத்தின்கீழ் 8 கி.மீ. நீளமுள்ள சுகாதார நடைபாதை திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசுகையில், "தமிழக முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, மக்களின் உடல்நலனைப் பேணிக்காக்க இத்திட்டம் இரண்டாம் கட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் தினந்தோறும் நடைப்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான உடல்நிலையைப் பெற்று, சுறுசுறுப்பாக இருக்க முடியும். அனைவரும் இத்திட்டத்தைப் பயன்படுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உருவாக்கிக்கொள்ள வேண்டும்," என்று வலியுறுத்தினார். மேலும், நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உடல்நலப் பரிசோதனை நிலையத்தையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.

இந்த விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. கோவிந்தன், வட்டார மருத்துவ அலுவலர் மரு. தமிழ்செல்வி, மாவட்ட விளையாட்டு அலுவலர் ராஜேஷ் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# "கட்சியை வளர்த்த தியாகி": உடல்நலம் பாதிக்கப்பட்ட மூத்த நிர்வாகி மூர்த்திக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி புகழாரம்

சின்னாளபட்டி, மார்ச். 14-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், வீரக்கல் ஊராட்சிக்குட்பட்ட கும்மம்பட்டியைச் சேர்ந்த திமுக மூத்த நிர்வாகியும், ஒன்றிய துணைச் செயலாளருமான க.மூர்த்தி (89) உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்த அமைச்சர் ஐ.பெரியசாமி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தார்.

*திமுகவின் ஆரம்ப கால போராளி:*

முத்தமிழறிஞர் கலைஞரின் வழிகாட்டுதலின்படி, ஆத்தூர் ஒன்றியத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே சைக்கிளிலும், நடந்தும் கிராமம் கிராமமாகச் சென்று திமுகவை வளர்த்த பெருமைக்குரியவர் க.மூர்த்தி. தற்போது உடல் நலம் குன்றிய நிலையிலும், கட்சிப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவரைச் சந்தித்த அமைச்சர் ஐ.பெரியசாமி, "ஆத்தூர் ஒன்றியத்தில் கட்சியை வளர்ப்பதில் உங்களின் பங்கு அளப்பரியது. மறைந்த ஒன்றிய செயலாளர் பி.வி.பி. முருகேசனுடன் இணைந்து நீங்கள் ஆற்றிய பணிகள் இன்றும் கட்சித் தொண்டர்களுக்குப் பாடமாக உள்ளன," எனப் புகழாரம் சூட்டினார்.

*நெகிழ்ச்சியான தருணம்:*

அமைச்சரின் வருகையால் மிகுந்த மகிழ்ச்சியடைந்த க.மூர்த்தி, வரும் சட்டமன்றத் தேர்தலில் அமைச்சர் ஐ.பெரியசாமி வரலாறு காணாத வெற்றியைப் பெறுவார் என வாழ்த்தினார்.

இந்நிகழ்வின் போது திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், மணி, அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உடனிருந்தனர்.

# தேர்தல் விதிமுறைகளைத் தீவிரமாகக் கண்காணிக்க அதிகாரிகளுக்கு மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் அறிவுறுத்தல்

புதுச்சேரி, மார்ச். 14-




எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மாவட்டத் தேர்தல் நிர்வாகம் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அனைத்துத் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (ROs) மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் (Nodal Officers) கலந்துகொண்டனர்.*ஆட்சியரின் அறிவுறுத்தல்கள்:*

*வேட்பு மனு தாக்கல்:* மனுக்களைப் பெறுதல் மற்றும் அவற்றை முறையாக ஆய்வு செய்யும் நடைமுறைகள்.*விதிமுறை கண்காணிப்பு:* தேர்தல் நடத்தை விதிமீறல்கள் ஏற்படாமல் தீவிரமாகக் கண்காணித்தல் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் செலவீனங்களைக் கண்காணிக்கும் முறைகள். *பயிற்சி மற்றும் இயந்திரங்கள்:* வாக்குச்சாவடி அதிகாரிகளுக்கு உரியப் பயிற்சி அளித்தல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (EVM) தயார் நிலையில் வைத்திருத்தல். *புதிய முயற்சிகள்:* இந்தத் தேர்தலில் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்த உள்ள புதிய முயற்சிகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து அதிகாரிகளுக்கு விளக்கப்பட்டது.பங்கேற்றவர்கள்:இந்நிகழ்வில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் திரு. சுதாகர், துணை மாவட்டத் தேர்தல் அதிகாரி திரு. கண்ணபிரான் மற்றும் பல்வேறு துறை சா ர்ந்த தேர்தல் அதிகாரிகள் கலந்துகொண்டனர். தேர்தல் பணிகளை எவ்வித தொய்வுமின்றி, நேர்மையான முறையில் நடத்தி முடிக்க அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஸ்ரீ கோமதி அம்பாள் டிராவல்ஸ்

ஏர் புஷ்பேக் சொகுசு பேருந்து வாடகைக்கு கிடைக்கும்
சங்கரன்கோவில்
ஆறுமுகம் - 98657 64957

கேரளா பர்னிச்சர்


ரயில்வே பீட்டர் ரோடு, சங்கரன்கோவில் 627756
9895544685 / 7092779356

G. Siva
99437 75284
63800 79305
S.PRATHIKA
INTERIOR
No.3-2-34, Nallaiya Nayakkar 4th Street,
Alanganallur, Madurai - 625501.
Modular Kitchen | Bed Room | Pooja Room

S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P. மணிகண்டன் B.Com., 78452 54592
P. பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

SRI GANAPATHY ELECTRICALS
HARDARE & PIPES
#156, Jayakumar Lane, Omalur Road,
Five Road, Salem - 636 004
All Types of Electricals & Hardware Pipes Avail Here

98842 99777 91591 58769

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000